# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>சாகர் பந்து நடவடிக்கையின் கீழ் மஹியங்கனையில் முக்கிய தொடர்பாடல் இணைப்புகள் இந்திய இராணுவத்தினரால் சீரமைப்பு</u>**

இலங்கையில் டித்வா சூறாவளி காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளை அடுத்து இந்திய இராணுவத்தின் சட்ரஜீத் பிரிகேட்டின் ஒருங்கிணைந்த செயலணியினர் நேற்றைய தினம் (10) கண்டி அருகில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் அத்தியாவசிய தொலைத்தொடர்பு கட்டமைப்பினை மீளமைத்துள்ளனர்.

2. இப்பகுதியில் சூறாவளி Optical Fibre Cable (OFC) வலையமைப்பை கடுமையாக சேதப்படுத்தியதன் காரணமாக மஹியங்கனை பகுதியில் பாரியளவில் இணைப்புகள் துண்டிக்கப்பட்டன, இதனால் பரவலான தகவல் தொடர்பு சேவைகள் துண்டிக்கப்பட்டன. இந்நிலையில், ஸ்ரீலங்கா டெலிகொம் (SLT மொபிடெல்) இன் அவசர கோரிக்கைக்கு அமைவாக இந்திய இராணுவ சமிக்ஞை வல்லுனர்கள் விரைவாக நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். சவால்மிக்க காலநிலை மற்றும் மோசமான தரைக் கட்டமைப்புக்கு மத்தியிலும், இந்திய இராணுவத்தின் கள மருத்துவமனைக்கு அருகிலுள்ள BTS கோபுரத்திற்கு அருகில் மரம் வீழ்ந்தமையால் இணைப்புகள் துண்டாடப்பட்ட OFC இணைப்பின் பாதிக்கப்பட்ட பகுதியை இச்செயலணி சென்றடைந்தது. துல்லியமான OFC இணைப்பு மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம் மூலம், இச்செயலணியானது பொது மற்றும் செயல்பாட்டு வலையமைப்புகளுக்கான இணைப்பை சீரமைத்தது. இந்த நடவடிக்கை மஹியங்கனையில் உள்ள முதன்மை தகவல் தொடர்பு கட்டமைப்பை சீரமைத்து, முக்கியமான தருணத்தில் தகவல் தொடர்பு இணைப்புகள் துரிதமாக சீரமைக்கப்படுவதை உறுதி செய்தது.

3. இதேவேளை, கண்டி அருகில் மஹியங்கனை பகுதியில் இயங்கும் இந்திய இராணுவத்தின் கள வைத்தியசாலைக்கு சுகாதாரத் துறை பிரதி அமைச்சர் கௌரவ டாக்டர் முதித ஹன்சக விஜேமுனி மற்றும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் டாக்டர் அனில் ஜாசிங்கே ஆகியோர் விஜயம் செய்திருந்தனர். அவர்கள் அங்கு முன்னெடுக்கப்படும் மருத்துவ சேவைகளை மீளாய்வு செய்ததுடன் அவசர சிகிச்சை, மருத்துவ பராமரிப்பு சேவைகள் மற்றும் உயிர்காக்கும் ஆதரவு போன்ற செயற்பாடுகள் உட்பட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படும் முக்கியமான மனிதாபிமான உதவிகளைப் பாராட்டினர்.

4. இந்த நெருக்கடியான தருணத்தில் பரந்தளவிலானதும் உரிய நேரத்தில் முன்னெடுக்கக் கூடியதுமான நடவடிக்கைகளுடன் இலங்கைக்கு ஆதரவளிக்க இந்தியா தயார் நிலையில் உள்ளது. மனிதாபிமான நிவாரண பணிகள் மற்றும் மருத்துவ பராமரிப்பு சேவைகளுக்கு அப்பால், முக்கியமான பொது சேவைகளின் தொடர்ச்சியை உறுதிப்படுத்தல் மற்றும் உடனடி நடைமுறைத் தேவைகள் ஆகியவற்றை நிவர்த்தி செய்யும் உடனடி மற்றும் முக்கிய கள நிலை தலையீடுகள் உள்ளிட்டவற்றையும் இந்த ஆதரவுகள் கொண்டிருக்கின்றன. இந்த முயற்சிகள் நெருக்கடி நிலையில் பதிலளிக்கும் செயற்பாடுகளை வலுப்படுத்துகின்ற அதேநேரம் இலங்கை மக்களுடன் உறுதுணையாக நிற்பதற்கான இந்தியாவின் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை சுட்டிக்காட்டுகின்றன.

***************

**கொழும்பு**
**11 டிசம்பர் 2025**